★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆடி 10 ஷவ்வா 15 இதழ் 165

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 26—7—83

## கொழும்பில் ஊரடங்கு நேற்று பகல் முதல் அமுல்

(கொழும்பு)

கொழும்பு, கல்கிசை, தெஹிவளை ஆகிய இடங்களில் ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

நேற்றுப்பிற்பகல் இரண்டு மணியிலிருந்து இச்சட்டம் கொண்டுவரப்பட்டது.

கொழும்பு மேற்குப்பகுதி உட்படகளுத்துறை, கம்பஹா, ஆகிய பகுதிகளில் நேற்று மாலை ஆறு மணியிலிருந்து காலை ஐந்து மணிவரை ஊரடங்குச்சட்டம் அமுலாக்கப்பட்டது.

இச்சட்டத்தை மீறுவோர் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கைகளின் கீழ் இச்சட்டத்தை மீறுவோர் எச்சரிக்கையின்றி சுடப்படுவார்கள் கொள்ளையடிப்போர் மீது மரணதண்டனை விதிக்கப்படும்.

கொழும்பில் நேற்று ஊரடங்குச்சட்டம் திடீரென அறிவிக்கப்பட்டதையடுத்து காரியாலயங்கள் மற்றும் வேலை ஸ்தலங்களை உடனடியாக மூடிவிடுமாறு பணிக்கப்பட்டது. ஊழியர்களின் நலனை முன்னிட்டு விசேட பஸ்சேவைகளும் மேற்கொள்ளப்பட்டன.

விமான நிலையப் பயணிகளுக்கு ஊரடங்குச் சட்டம் அமுலாகு முன்னரே அங்கு செல்லும்படி பணிக்கப்பட்டது.

அத்துடன் ஊரடங்கு சட்ட நேரத்தில் அங்கு செல்பவர்களுக்கு விசேட அனுமதி வழங்கவும் பொலிஸில் வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த தொண்டர் சேவையினர் உடன் சேவைக்குத் திரும்புமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (கி)

# யாழ். மாவட்டப் பாடசாலைகள் தவணைப்பரீட்சை ஒத்திவைப்பு

## உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளுக்கான தவணைப் பரீட்சைகள் யாவும் அடுத்த தவணைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன. கல்விப் பகுதி உத்தியோகத்தர்கள் நேற்று அதிபர்களுக்கு அறிவித்ததைத் தொடர்ந்து நேற்று நடைபெறவிருந்த பரீட்சைகள் பின்போடப்பட்டன.**

நேற்று ஆங்கிலம், சமூகக் கல்வி ஆகிய பாடங்களுக்கான பரீட்சைகள் நடைபெறவிருந்தன. யாழ்ப்பாணத்தில், பஸ் சேவைகள், மினி பஸ் சேவைகள் அதிகமான பகுதிகளில் நடைபெருததினுல் பெரும்பாலான மாணவர்கள், குறிப்பாக மாணவிகள் கல்லூரிகளுக்கு வரவில்லை.

யாழ். நகரிலுள்ள வேம்படி மகளிர் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ். கன்னியர் மடம் ஆகியவற்றில்பெரும்பாலும் மாணவிகள் ஒருசிலர் மட்டுமே வந்திருந்தனர். பரீட்சை ஒத்திவைக்கப்பட்டதையறிந்து இவர்கள் திரும்பிச் சென்றனர். யாழ். நகரிலுள்ள மற்றும் கல்லூரிகளுச்கும்வந்திருந்த மாணவர்களுக்கும் பரீட்சை ஒத்திவைப்புப்பற்றிஅறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாணவர்கள் திரும்பிச் சென்றனர்.

பல மாணவர்கள் தங்கள் வீடுகளுக்கு நடந்தே சென்றதாகக் கூறப்படுகிறது.

நேற்று ஆரம்பமாகவிருந்த தவணைப் பரீட்சை இம்மாதம் 29ம் திகதிவரை நடைபெறவிருந்தது. சகல பரீட்சைகளும் அடுத்த தவணைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகக் கல்விப் பகுதியினர் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை 6-30மணிக்கு பஸ்சேவை ஆரம்பித்தபோதும் அநேகமான பஸ்கள் காலியாகவே சென்றன. ஒரு சில பஸ்களில் மிகக் குறைவாகவே காணப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் வர்த்தக நிலையங்கள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. வீதிகளில் சன நடமாட்டம் குறைவாகவே காணப்பட்டது.

யாழ். நகரிலுள்ள தியேட்டர்களில் காட்சிகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணத்தில் டாக்ஸிகள், கார்கள், லொறிகள் சேவையில் ஈடுபடவில்லை.

கடந்த இரு தினங்களாக கடைகள், வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டதால், அரிசி, சீனி, மாவு போன்ற அத்தியாவசிய பொருட்களுக்கும் மரக்கறிவகைகளுக்கும், தேங்காய்க்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

முக்கிய சந்தைகளில்கூட போக்குவரத்துச்சேவைகள் நடைபெருததினுல் வியாபாரிகள் வரவில்லை. மீன், இறைச்சி வகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பெற்றோல், மண்ணெண்ணை வாங்க சில தினங்கள் காணப்பட்ட நீண்ட கியூக்களை கடந்த இரு தினங்களாக காணவில்லை.

எரிபொருள் நிலையங்கள் யாவும், வெறிச்சோடிக்கிடக்கின்றன.

மக்கள், கூட்டம் கூட்டமாக, வீட்டுப் படலைகளில் காணப்படுகின்றனர். எவரும் வெளியில் செல்ல அஞ்சுகின்றனர்.

அரசாங்க அலுவலகங்கள், மாநகரசபை, உபதபால்நிலையங்கள் ரயில்நிலையங்கள் எங்கும் அமைதியாகவே காணப்படுகிறது. மக்கள் நடமாட்டம் எதுவும் இல்லை.

நேற்றுமுன்தினம் (ஞாயிறு) யாழ். நகரில் முழுநாளுமே வெறிச்சோடிக் காணப்பட்டது. கடைகள் பூட்டப்பட்டு, வாகனங்கள் எதுவும் சேவையில் ஈடுபடவில்லை. மக்கள் நடமாட்டமும்இல்லை. ஞாயிறு பிற்பகல் 4 மணிக்கே நகரம் அடங்கிவிட்டது.

கடந்தஇருதினங்களாகஅடிக்கடி மின்சாரத்தடை ஏற்பட்டு வருகிறது. இரவிலும் நீண்ட நேரம் மின்தடை ஏற்பட்டது.

மன்னார் மாநாட்டிற்குச் சென்ற யாழ். மாவட்ட எம்.பி.க்கள் எவரும் நேற்றுப் பகல் வரை யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை. வவனியா, திருமலை எம்.பி.க்கள் மட்டும் தங்கள்தொகுதிகளுக்குதிரும்பி விட்டனர்.

யாழ். பெரிய ஆஸ்பத்திரிக்குக்கூட, நோயாளிகள் செல்ல அஞ்சுகின்ருர்கள். சிலர் தனியார் மருத்துவமனைக்கு செல்கின்றனர்.

யாழ் பெரியகடை மரக்கறிச் சந்தை கடந்த இருதினங்களாகக் கூடவில்லை. இதனுல் நகரில் உள்ள மக்கள் பாவனைப் பொருட்களைப் பெறுவதில் பாதிப்படைந்துள்ளர். (க)

## யாழ். பல்கலைக்கழகப் பரீட்சைகளும் ஒத்திவைப்பு!

### பதிவாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் சகல கல்விப்பீடங்களினதும் பரீட்சைகள் ஒரு வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் திரு. தர்மபாலன் இத்தகவலை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஒவ்வொரு பரீட்சைகளும் அவை நடைபெறவிருந்த திகதிகளிலிருந்தே ஒரு வாரத்துக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளன என்று கூறினர். (கி)

## எம்.ஜி.ஆர். மோட்டார் கார் தாக்கப்பட்டது!

சென்னை, ஜுலை 25

தமிழக முதலமைச்சரும், அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருமான திரு. எம். ஜி. இராமச்சந்திரனின் மோட்டார் கார் நேற்று சேதமாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமிழகத்தின் பிரதான எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டவர்களே முதலமைச்சரின் காரைத் தாக்கினராம்.

இத்தாக்குதல் குறித்து பிரதமர் திருமதி இந்திரா காந்தி முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனுடன் தொடர்பு கொண்டு விசாரித்தார்.

இதேவேளை திராவிட முன்னேற்றக்கழகப் பொருளாளர் திரு. சாதிக் பாட்ஷா இத்தாக்குதல் குறித்து தமது கட்சிமீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை மறுத்துள்ளனர்.

''எமது கட்சியினர் இந்தச் சம்பவத்துடன் எதுவும் சம்பந்தப்படவில்லை. சில விஷமிகள் எமது கட்சிக்கு இழிவுதேடித் தரும்வகையில் இச்சம்பவத்தில் இறங்கியிருக்கிருர்கள்'' என்று அவர் தெரிவித்தார். (கி)

## "பொருளாதாரத்தில் முன்னேற மக்கள் சுகதேகிகளாக வேண்டும்"

(வவனியா)

''சௌக்கியமென்பது; பூரண உடல், மனே சமூக ரீதியான ஓர் நல்வாழ்வு நிலையேயன்றி வெறுமனே நோய் அல்லாது பலம் குன்றிய தன்மையை குறிப்ப தொன்றன்று என்று உலகச் சுகாதார ஸ்தாபனம் தாரக மந்திரமாக விபரித்து, மனித குலத்தினுல் அடையக்கூடிய சாத்தியமிக்க ஓர் இலட்சியமாக வகுத்துள்ளனர். இந்த இலட்சியத்தை நாம் அடைய வேண்டும்''

அவர் மேலும் கூறியதாவது: வவனியா நகரசபை மண்டபத்தில் நடந்த தேசிய சுகாதாரவிழாவில் வவனியா சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. பரிமேல்அழகர் தலைமைவகித்து நிகழ்த்திய உரையில் மேற்கண்டவாறு கூறினர். அவர் மேலும் கூறியதாவது:

''இவ்விழா சர்வ சாதாரண ஒரு விழாவாகத் தோன்றினுலும் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஓர் அதிவிஷேச விழா என்பதை உங்கள் முன் கூறிவைக்க ஆசைப்படுகின்றேன். எமது வவனியா கிராமத்திற்கு வளர்ச்சியடைந்த வேறு ஒரு சிநேக நாட்டின் உதவியுடன் இங்கே எமக்குக் குடிப்பதற்கு தூய நீர் விநியோகமும், கழிவுப் பொருளாகிய சூழல் சுகாதாரச் சீர்திருத்த முறையாக நல்ல மலகூட அமைப்மையும் 'ஜீ.ரீ.சற்' நிறுவனம் தந்துதவ முன்வந்தமை எமது நாட்டிற்கு ஒரு வரப் பிரசாதம் என்று நான் கூறுவதிலே இந்த விழாவிற்கு ஒரு மவுசு ஏற்படுகின்றது. இந்த உதவியை எமது கிராம மட்டத்திற்குக் கொண்டுவந்த நாடாளுமன்ற உறுப்பினருக்கும் நிர்வாகப் பொறுப்பேற்று நடாத்தும் அரசாங்க அதிபருக்கும் அரசாங்கத்திற்கும் எனது நன்றியைச் செலுத்துகின்றேன்.

''எமது வவனியா மாவட்டத்தை முழுமையாக எடுத்துக் கடந்த 15வருடகாலத்தை ஓர் அளவு கோலாக நாம்நோக்கினுல் தடுக்கக் கூடியவைகளாகிய குடல் நோய்கள் எமது மக்களை எவ்வாறு தாக்கி, இத் தாக்கப்பட்ட மக்களைஎவ்வாறு நலியப் பண்ணியதென்பது தெரியவரும். ஒரு நாடு பொருளாதாரத்தில் முன்னேற்றம் காணவேண்டுமானுல் அந்நாட்டு மக்கள் சுகதேகிகளாக இருக்கவேண்டுமென்பது ஓர்

(4-ம் பக்கம் பார்க்க)

### செய்தித் தணிக்கை அமுல்

கடந்த புதன்கிழமை 20ம் திகதி முதல் பயங்கரவாதம் சம்பந்தமான செய்தித் தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும் ஒவ்வொரு செய்தியும் தணிக்கை அதிகாரியின் அனுமதி பெற்றே பிரசுரமாகிறது.

## வரி விளம்பரம்

### தேவை

ஒருவருடத்திற்கு மேல் அனுபவம் உள்ள பெண் நெசவாளர்கள் தேவை. சகல விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விலாசம்: விளம்பர இலக்கம் 8091 C/o ஈழநாடு யாழ்ப்பாணம், 8091

### விற்பனைக்கு

நல்ல நிலைமையில் வேலை செய்துகொண்டிருக்கும் பெரிய எலக்ரோலக்ஸ் (Electrolux) குளிர்சாதனப்பெட்டி விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8071, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 8071

### பின்னுறுதிக்கட்டளை அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம்
பருத்தித்துறை

தொண்டமனுற்றைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னையா கிருஷ்ணசாமியின் மரணசாதனத்தை நிறைவேற்றுதல் விடயமாக.

1. இராசா இராசமணி
2. பெண் நாகேஸ்வரி- இருவரும் நடுத்தெரு தொண்டமனுறு.

மனுதார்கள்

தத்துவ நியாயாதிக்க)
இலக்கம்: 1154 ) -எதிர்

1. இராசா இராசமணி மகன் கிருஷ்ணகுமார் நடுத்தெரு- தொண்டமனுறு தமது வழக்குப் பாதுகாவலன் (பராயமற்றவர்)
2. ஏ. தியாகராசா பழைய பாலத்தெரு தொண்டமனுறு-மூலம்

எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டு புரட்டாசி மாதம் 9ம் தேதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறுபதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் ஏதுமிருப்பின் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
**க. செல்வராசா,**
பதிவாளர்.

வரைவு:
மனுதார்களின்
சட்டத்தரணி.
1982ம் ஆண்டுஐப்பசிமாதம் 27ம் தேதியன்று.

8058


# அபிவிருத்தி வேலைகள்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுக்கு பன்முக வரவு செலவுத்திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி அபிவிருத்தி வேலைகளுக்கென 42,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இன்நிதி நெடுந்தீவு மூன்று கிராமோதயசபைகளுக்கும் நெடுந்தீவு பிரதேச சபையால் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அனுமதியும் வேலை செய்வதற்கு பெறப்பட்டுள்ளதென்பதும்குறிப்பிடத்தக்கது.

# புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

வண். நாவலர் மகாவித்தியாலயம் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டன.

தலைவர்:அதிபர்ப. சிவஞான சுப்பிரமணியம், உப-தலைவர்: க. இராமசாமி, கரியதரிசி: சி.இராசாமணி பொருளாளர்: செ. சிவஞானசுந்தரம் செயற்குழு உறுப்பிர்: நா. சோதிநாதன் (உப-அதிபர்), சோ. சண்முகரத்தினம், த. சகாதேவன், சு. பாலசுப்பிரமணியம், A.சாத்தாவுச்செட்டியார், வி.கோபாலகிருஷ்ணன், இ. பஞ்சாட்சரம், இ.கெங்காதரன், திருமதி. வ. அரியரத்தினம். (த)

### பாடசாலை அ.ச.

யாழ். மத்திய கல்லூரி பாடசாலை அபிவிருத்திச்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் புதுவருட உத்தியோகத்தர் தெரிவின்போது தலைவராக அதிபர் திரு. வி. பாலசுந்தரமும், செயலாளராக திரு. வி. ரி. கணேசலிங்கமும், பொருளாளராக திரு. என். கே. ரகுநாதனும்ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

பதினெட்டுப்பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (கி)

### புத்தூர் அறிவொளி ஐ. ச. நி.

புத்தூர் அறிவொளி ஐக்கிய சனசமூக நிலைய நடப்புவருட நிருவாகசபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: நா. சிவஞானம், உபதலைவர்: பொ. சின்னத்தம்பி, செயலாளர்: நா. திரவியம், உபசெயலாளர் நா. திருஞானேஸ்வரம் தனாதிகாரி: சி. தங்கராசா, நூலகபொறுப்பாளர் திரு. பி. தர்மகுலசிங்கம், போஷகர்கள்: க. அரியகுட்டி, ப. இராசதுரை (க)

### கைதடி இந்துஇளைஞர் கழகம்

கைதடி கிழக்கு இந்து இளைஞர் கழகத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் திரு. ந.குமரகுருபரன் தலைமையில் நடைபெற்றது. புதிய அலுவலர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: மா. சிவபாதம், உப-தலைவர்: க. கேதீஸ்வரன், செயலாளர்: வ. சி. பொன்னம்பலம், துணைச்செயலாளர். ஆ.விக்னேஸ்வரராசா, பொருளாளர்: வே. கனகநாதன், துணைப்பொருளாளர்: ஆ. பூபாலசிங்கம், பத்திராதிபர். சி. கணேசலிங்கம், பஜனைக்குழு அமைப்பாளர்: கு.குபேந்திரராசா. (க)

### பாரதி ச. ச. நி.

யோகபுரம் 1ம் பகுதி பாரதி சனசமுக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இந்நிலைய மண்டபத்தில் நடைபெற்றபோது நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

திரு. கு.சிவஞானசண்முகம் தலைவராகவும், திரு. க. கனகலிங்கம் உப- தலைவராகவும் செல்வன் சு. கிருஷ்ணராசா செயலாளராகவும், செல்வன் த.ஜெயச்சந்திரன், உபசெயலாளராகவும் திரு. மு.சிவராசா பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

திருவாளர்கள்: ச. சிவஞானம், ந. ஜெகதீஸன், க. குமரகுருபரன், க. கணேசலிங்கம், தி, பேரின்பநாதன். ப. வி. தங்கவேலாயுதம், இ. இரத்தினராசா, மு, நவரத்னராசா ஆகியோர்கள் நிர்வாக சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்கள். (க)

### ஶ்ரீவாகீஸ்வரி ச. ச. நிலையம்

கோண்டாவில் வடக்கு ஶ்ரீ வாகீஸ்வரி சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் திரு. மு. தேவராசா தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு ஆண்டு உத்தியோகத்தர்களாக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

திருவாளர்கள் க. ஶ்ரீதரன் (தலைவர்), ஐ. நாகேஸ்வரன் (உபதலைவர்), க.தர்மராசா (செயலாளர்), ப. மகேந்திரம் (உப-செயலாளர்), செ. சற்குணம் (பொருளாளர்). நிர்வாகசபை உறுப்பினர்களாக திருவாளர்கள் செ. தர்மகுலசிங்கம், வ. தவராசா, செ, வரதராசா, மா. உருத்திரராசா, தே. ரவி, இ. குவானந்தராசா தெரிவு செய்யப்பட்டனர். (க)

# வெங்காய செய்கை பாதிப்பு

(பண்டத்தரிப்பு)

நீடித்த வரட்சியினாலும், வெப்பநிலை அதிகரித்துள்ளதாலும் இப்பகுதியில் வெங்காயச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வெங்காய பயிர்கள்யாவும் காய்ந்து தண்

(4-ம் பக்கம் பார்க்க)

# "பாடசாலையில் குருபக்தி வளரவேண்டும்'

(யாழ்ப்பாணம்)

''நாகரிகம் நாளுக்கு நாள், நிமிடத்துக்கு நிமிடம் விநாடிக்கு விநாடி முன்னேறி வருகிறது. ஆனல் நாகரிகம் வளர்ந்து வரும் வேகத்தில் குருபக்தி குறைந்து செல்வது கவலையளிக்கிறது''

இவ்வாறு தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி விடுதிமன்றத்தினரால் நடாத்தப்பட்ட வருடாந்த இராப்போசன விருந்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய தெல்லிப்பழை மாவட்ட வைத்திய உத்தியோகத்தர் வைத்திய கலாநிதி சி. கதிரவேல்பிள்ளை கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், ''கற்றது கைம் மண்ணளவு கல்லாதது உலகளவு. மேலும் மேலும் எங்களது அறியாமையைப் போக்கிக் கல்வியை ஊட்டும் குருவுக்கு உரிய மரியாதையழிக்கப்படவேண்டுமெனவும் குருபக்தி வளரவேண்டுமெனவும்'' கூறினர்.

மன்றத் தலைவர் செல்வன் இ. அமிர்தநாதன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட வவனியா மாவட்டக் கல்வி அதிகாரி திரு. பொ. சோமசுந்தரம் பேசுகையில், ''ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரிஓம்பப்படும்'' என்றுணர்ந்து மகாஜனக்கல்லூரி மாணவர்களும், மகாஜனக் கல்லூரி விடுதி மாணவர்களும் ஒழுக்க சீலர்களாக, கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடையவர்களாகத் திகழ்வதுடன் அவர்களுட் பலர் டாக்டர்களாக மிளிர்ந்து நாட்டு மக்களுக்கு அரும்பெரும் சேவைசெய்வது கண்டு அகம்மகிழ்கிறேன்'' என்று கூறினர்.

கல்லூரி அதிபர் திரு. த. சண்முகசுந்தரம், பிரம்மஶ்ரீ இரத்தினேஸ்வர ஐயர், திரு. செ. இராஜகுலேந்திரன், செல்வன் சி. இரவீந்திரன், செல்வன் அன்ரன் மரியதாஸ் ஆகியோரும் உரையாற்றினர்கள்.

# "சமாதான நீதவான்களாக சேவைமனம்கொண்டவர்களை நியமிக்க வேண்டும்"

(வண்ணுர்பண்ணை)

''ஒருகாலத்தில் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்துவதற்கு கூட நகர்ப்புறங்களுக்கு பஸ் ஏறிச்செல்ல வேண்டிய நிலை கிராமப்புற மக்களுக்கு இருந்தது. கிராமப்புறங்களிலும் மக்களுக்கு பயன்படுவதற்கு ஏற்ற வகையில் சமாதான நீதவான்கள் நியமிக்கப்படுவது வரவேற்கத் தக்கதொன்றுகும். ஆனல் மக்களுக்கு உதவக்கூடிய சேவை மனம்கொண்ட நடுநிலை வாதிகளாக மக்களுக்கு பயன்படக்கூடியவர்களாக சமாதான நீதவான்கள் நியமனங்கள் இடம் பெறவேண்டும்''

இவ்வாறு மண்டைதீவில் புதிய சமாதான நீதவானக நியமனம் பெற்ற திரு. தம்பையா சிவபரம்சோதிக்கு நடத்தப்பட்ட வரவேற்பு வைபவத்தில் உரையாற்றிய மண்டைதீவு கிராமோதயசபை தலைவர் திரு. இ. நா, இராசலிங்கம் தெரிவித்தார்.

மண்டைதீவு தெற்கு பகுதியில் யாழ்.மாவட்ட சமாதான நீதவானக இருந்த திரு. க. கைலாசபிள்ளை காலமாகி பல ஆண்டுகள் சென்றும் இப்பகுதியில் அந்த இடம் நிரப்பப்படாமல் இருந்தது. இந்த இடத்தைநிரப்புவதற்குபொது மக்களது வேண்டுதலை ஏற்று ஒரு சமாதான நீதிபதி ஒருவரை நியமித்ததற்காக எமது பாராளுமன்ற உறுப்பினருக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம் என்றும் அவர் சொன்னர். மற்றும் பலர் உரையாற்றினர். (க)

# இஸ்ரேல் அமைச்சர்களுக்கு றீகன் அழைப்பு!

## இஸ்ரேல் லெபனனில் ஒருபகுதி துருப்புகளை வாபஸ்பெற முடிவு!

வாஷிங்டன், ஜுலை 25,

இஸ்ரேலிய பாதுகாப்பமைச்சர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோரை லெபனன் விவகாரம் பற்றி ஆராய வாஷிங்டன் வருமாறு அமெரிக்க அதிபர் றீகன் அழைப்பு விடுத்துள்ளார்.

லெபனன்நிலை குறித்து அவசர முடிவுகளை எடுக்கும் விதத்திலேயே திரு. றீகன் இவர்களைச் சந்திக்கவுள்ளார். இஸ்ரேலிய பிரதம மந்திரி திரு. மெனச்சம் பெகின் கடந்தவாரம் வாஷிங்டன் செல்லவிருந்தார். பின்னர் சில பிரத்தியேக காரணங்களையடுத்து தமது விஜத்தை ஒத்திப் போட்டுள்ளார். இதனைத் தொடர்ந்தே திரு. றீகன் மேற்குறிப்பிட்ட இரு இஸ்ரேலிய அமைச்சர்களையும் அழைத்துள்ளார்.

இஸ்ரேலியப் படைகளின் ஒருபகுதியை லெபனனிலிருந்து திருப்பியழைக்க இஸ்ரேல் முடிவு செய்துள்ளது. இவ்வாறு இஸ்ரேலியப்படைகள் திருப்பியழைக்கப்பட்டால் லெபனனில் சில பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பெக்கா பள்ளத்தாக்கு பகுதியில் நேற்று கடும் சண்டை நிலவியது. பாலஸ்தீன இயக்கப் பிரிவினர்களுக்கிடையிலேயே இம் மோதல் இடம் பெற்றதாகவும் சுமார் 50 பேர்வரை இதில் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (கி)

# இன்றுவெள்ளி விழாகாணும் தணுவில் சந்தான மாதா!

விண்ணகத்திலுள்ள பரிசுத்தர்கள் அனைவரிடத்திலும் முதலிடம் பெறும் கன்னி மரியாயி, மீட்பரின் அன்னை. அந்த அன்னையை எமக்குத்தந்தவள் புனித ஆளுள் முனீஸ்வரி என்னும் அன்னம்மாள். பிள்ளைப் பாக்கியம் இல்லாதாருக்கு அப்பேறு கிடைக்கச் செய்யும் பேறு பெற்றதால், இன்று சந்தானமாதாவாகியவள்.

தலைவில்லுச் சேத்திரத்தில் பக்தகோடிகளை தம் பாதாரவிந்தத்தில் பாசத்தோடணைத்து ஆதரவு நல்கும் இந்த அன்னை, கரம்பன் பங்கில் தனக்கொரு இடத்தை அதுவும் குடிமனை ஏதுமற்ற தரிசு நிலத்தில் பள்ளி கொண்டுள்ளார்.

முதற் தமிழ் ஆயர் என்ற பேறு பெற்றவரும் கரம்பன் பங்கைச் சேர்ந்தவருமான காலஞ்சென்ற யாழ். ஆயர் பேரருட்திரு ஜே. எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகை அவர்கள் அன்னைக்கு ஆலயமெடுக்க 1957ம் ஆண்டு தமது ஒப்புதலை வழங்கிய அவ்வாண்டே கட்டிட வேலைகள் ஆரம்பமாகின. சுருவிலைச் சேர்ந்த வர்த்தகர் திரு. எஸ். பி. சின்னத்துரை தமது காணியைக் கொடுத்து கோவிலையும் தாமே கட்டிக் கொடுத்தார்.

1958 ஆடி 23ம் நாள் சுருவில் அன்னை மரி மாதா ஆலயத்தில் வைத்து புனித ஆளுள் முனீஸ்வரியின் திருச்சுரூபம் ஆசீர்வதிக்கப்பட்டு அங்கிருந்து ஊர்வலமாக தணுவிலில் அமைக்கப்பட்ட சிறிய ஆலயத்துக்கு எடுத்துவரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. அடுத்த ஆண்டில் கரம்பனைச் சேர்ந்த திரு. அந்தோனிப்பிள்ளை பீடப்பகுதியை நீட்டிக் கட்டிக்கொடுத்தார். இவ்வாலயம் 25 ஆண்டுகளாக பக்தர்கள் அருளிரந்து செல்லும் ஆலயமாக திகழ்ந்து வருகிறது. வருடாவருடம் ஆடி 17ல் நவநாள் ஆரம்பமாகி 26ம் திகதி ஆளுள் முனீஸ்வரியின்திருநாள் பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்படுகிறது.

—எஸ். எஸ். கே.

### கரவெட்டி

# கோவில்சந்தை புனரமைப்பு

(கரவெட்டி)

கரவெட்டி கோவில் சந்தைக் கட்டிடம் விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

ஒல்லாந்தர் காலத்து கட்டிடமான இது இடிந்துவிழும் நிலையில் உள்ளது. இதுபற்றி உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கத்தின் பணிப்பின் பேரில் யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை நெல்லியடி உப அலுவலக அதிகார உத்தியோகத்தர் திரு. கே. சண்முகநாதன் இத்திருத்தவேலைகளுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறார். [க]

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 4-15, 7-00
சனி, ஞாயிறு 1-30
சிவகுமார்-சரிதா
வண்டிச்சக்கரம்

சாந்தி யாழ். நகர்
10-30, 2-30, 6-30
சில தினங்கள் மட்டும்
தியாகம்
(கலர்)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 1-30, 6-15
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ் துணை
(கலர்)

மனோகரா (யாழ். நகர்.)
தினசரி 3 காட்சிகள்
ரஜனிகாந்த்-ஸ்ரீவித்யா
பொல்லாதவன்

ராஜா (யாழ்நகர்)
படம் பார்ப்பவர்களின்
வசதியை முன்னிட்டு
காட்சி நேரங்கள்
பின்வருமாறு:-
10-30, 1-30, 6-00
பாக்கியராஜ்- அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
நடித்த
அந்த 7 நாட்கள்
(கலர்)
கதைவசனம், டைரக்ஷன்
பாக்கியராஜ்


# பி. பி. சி. தமிழோசையில்

## நாமகிரிப்பேட்டை நாதஸ்வரம்

லண்டன், ஜூலை, 25 பி. பி. சி. தமிழோசையில் நாதஸ்வர இசைக் கலைஞர் நாமகிரிப்பேட்டை கிருஷ்ணனின் நாதஸ்வர இசை அடுத்த மாதம் 2ம் திகதியும் 9ம் திகதியும் ஒலிபரப்பாகும்.

நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் தமிழ்கூறும் நல்லுலகம் எங்கும் புகழ்பெற்ற நாதஸ்வரச் சக்கரவர்த்திகளில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் தமது இசைக் குழுவுடன் இவர் லண்டனுக்கு வந்திருந்தபோது பி.பி.சி. தமிழோசை அவருடையஇசையை ஒலிப்பதிவு செய்திருந்தது.

தமிழோசை தயாரிப்பாளர் சங்கர் நாமகிரிப்பேட்டை கிருஷ்ணனின் பேட்டியின் முன்னுரையோடு ஆகஸ்ட் 2ம் திகதி நாமகிரிப்பேட்டை கிருஷ்ணனின் நாதஸ்வர இசை தமிழோசையில் ஒலிபரப்பாகும். இந்திய-இலங்கை நேரப்படி இரவு 9-45லிருந்து 10-15வரை இந்நிகழ்ச்சி இடம்பெறும்.

## பஞ்சாப்பில் பிரிவினைக் கோரிக்கையை ஆட்சேபித்து பெரும் பாத யாத்திரை!

சண்டிகார், ஜூலை 25 பஞ்சாப் மாநிலத்தில் தீவிரவாதிகளின் பிரிவினைக்கோரிக்கைகளுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் பெரும் பாதயாத்திரையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த யாத்திரையில் நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த ஆயிரக் கணக்கானவர்கள் பங்கு பற்றுகிறார்கள்.

பாதயாத்திரை ஏற்பாட்டாளர்களில் ஒருவரான நிர்மலா தேஷ்பாண்டே என்பவர் பல பிரிவுகளாக இவ்யாத்திரைமேற்கொள்ளும் தொண்டர்கள் பிரிக்கப்பட்டுள்ளனர் என்றும் ஒவ்வொருபிரிவிலும் 500 தொண்டர்கள் பங்கு கொள்கின்றன ரென்றும் தெரிவித்தார்.

பதினைந்து தினங்கள் வரை இப்பாத யாத்திரைகள் நடைபெறவுள்ளன. பஞ்சாப் மாநிலத்தின் சுமார் இருபத்தைந்து முதல்முப்பது மாநிலங்களுக்கு இந்த யாத்திரைகள் செல்லவிருக்கின்றன.

நேற்று வரலாற்று முக்கியம் வாய்ந்த ஜாலியன் வாலாபாக்கில் இந்தயாத்திரை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அப்போது இதில் பங்கெடுத்துக் கொண்டவர்கள் நாட்டு ஒற்றுமைக்காக தாம் உழைப்பதாகவும் பிரிவினைவாதத்தை எதிர்ப்பதாகவும் உறுதி எடுத்துக் கொண்டனர்.

இதேவேளை நேற்று புதுடில்லியில் இந்திரா காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் உரைநிகழ்த்திய பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறியதாவது எதிர்க்கட்சிகளாலேயே பஞ்சாப்பிரச்னை மோசமடைந்துள்ளது. இப்பிரச்னையை எதிர்க்கட்சியினர் அனுதாப உணர்வுடன் அணுகாது மேலும் சிக்கலாக்கும் விதத்தில் அணுகியுள்ளனர். பஞ்சாப் பிரச்னை அம்மாநிலத்துக்குமட்டும் உரியதல்ல. நாடு முழுவதும் இப்பிரச்னையின் தாக்கங்கள் எதிரொலிக்கின்றன. ஆகையினால் எதிர்க்கட்சியினர் தமது பொறுப்புக்களை உணர்ந்து இப்பிரச்னை சம்பந்தமாக செயல்பட வேண்டும். என்றார்.

''பஞ்சாப் நிலவரம் சீரடையுமா? எனக்கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு ''அது பற்றி ஊகங்கள் எதனையும் தெரிவிக்க முடியாதுள்ளது. ஆனல் பிரச்னைகள் மேலும் சிக்கலடையுமென்றே எதிர்பார்க்க முடிகின்றது'' என்றும் திருமதி இந்திரா பதிலளித்தார்.

பஞ்சாப் மாநில பிரச்னைக்கு அமைதியான தீர்வுகாணப்பட வேண்டுமென்றும் பஞ்சாப் தீவிரவாதிகள் தமது பிரிவினை வாதத்தைக் கைவிட்டு நாட்டு ஒற்றுமையைப் பேணவேண்டுமென்றும் இந்தியாவின் ஐம்பது எழுத்தாளர்கள் அறிக்கையொன்றை விடுத்துள்ளனர். இவர்களில் பிரபலமானவர்களும் அடங்குகின்றனர். (கி)

### மேற்கு வங்கத்தில்

## அகதிகள் வரவைத் தடுக்க பலத்த எல்லைப் பாதுகாப்பு!

புதுடில்லி, ஜூலை, 25 மேற்கு வங்காளத்தில் அகதிகள் வரவைத் தடுக்க எல்லைப் பாதுகாப்புப் படையினர் கடும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

இம்மாநிலத்தின் இரண்டாயிரத்து இருநூறு மைல்கள் நீள எல்லைப்புறப் பகுதிகளில் இதற்கெனக் காவல் நிலையங்கள் மேலும் அமைக்கப்பட்டிருப்பதுடன் காவல் படையினரும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளனர். இத்தகவலை இம்மாநில எல்லைப் பாதுகாப்புப் படை அதிகாரி கல்கத்தாவில் தெரிவித்தார்.

மேற்கு வங்காளம், பங்களாதேஷின் எல்லைப்புறத்தில் அமைந்த மாநிலமாகும். இங்கு பங்களாதேஷிலிருந்து பெருமளவு மக்கள் அகதிகளாக வந்து குடியேறிய வண்ணம் இருக்கின்றனர். இவ்வகதிகள் வரவு இம்மாநிலத்தில் பெரும் சிரமங்களைத் தோற்றுவித்துள்ளது.

இம்மாநிலம் போன்றே பங்களாதேஷ் எல்லைப்புறத்தில் அஸாம்மாநிலம் அமைந்துள்ளது. இங்கு அகதிகள் வரவைத் தடுக்க 160மைல்கள் நீள சுவர் அமைக்கப்பட வேண்டுமென இம்மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. (கி)

### உலகக் கிண்ண கிரிக்கெட்:

## இந்தியா, பாகிஸ்தான் கூட்டாக நடத்த விருப்பம்!

புதுடில்லி, ஜூலை 25 இந்தியாவும், பாகிஸ்தானும் அடுத்த உலகக் கிண்ணகிரிக்கெட் போட்டியை கூட்டாக நடத்த முன்வந்துள்ளன.

இக்கூட்டுமுயற்சியை பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஸியாவுல்ஹக் ஏற்றுக்கொண்டுள்ளார். இதனை பாகிஸ்தானின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைதலைவர் ஏயர்மார்ஷல் லூரக்கான் தெரிவித்தார்.

இதுவரை நடைபெற்ற 'புறூடென்ஷல்' உலகக் கிண்ண கிரிக்கெட்போட்டிகள் இங்கிலாந்தின் பிரபலதனியார் நிறுவனமொன்றின் ஆதரவுடனேயே நடத்தப்பட்டன. ஆனல் அந்த நிறுவனம் உலகக் கிண்ணபோட்டிகளை நடத்துவதாக செய்து கொண்ட ஒப்பந்தம் கடந்த உலகக்கிண்ண பந்தயத்துடன் முடிவடைந்துள்ளது. இதனையடுத்தே பாகிஸ்தானும், இந்தியாவும் இப்பந்தயத்தை கூட்டாக நடத்த முன்வந்துள்ளன. (கி)

## தொழிலாளர் கட்சியும் கலைநிகழ்ச்சியும்

(கொழும்பு)

தொழிலாளர் ஐக்கியத்திற்கான குழுவினல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள தொழிலாளர் காட்சியும், கலைநிகழ்ச்சியும் இம்மாதம் 28ம் தேதி புதிய நகரமண்டபத்தில் நடத்தப்படும். திரு. வாசுதேவ நாணயக்காரா உரைநிகழ்த்துவார். (க)

## இன்றைய பலன்

ஆடி 10ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(26—7—83)

மேடம்: வாகன விருத்தியுடன் இல்லத்தில் திருப்தி காணும் மோகன வாழ்வு கிட்டும் முன்னேற்ற வாழ்வும் உண்டு முதியவர் ஆசி உண்டு தாய் வழித்தனமும் சேரும்.

இடபம்: புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும் புதிய அனுபவங்கள் கிடைக்கும் புத்திரர் வழியால் புகழ் கிடைக்கும் குறிக்கோள் வெற்றி உண்டு புதுமையில் நாட்டம் புதுப்பொலிவும் உண்டு.

மிதுனம்: மனதில் அமைதி குன்றும் எதிரிகள் எக்காளமிடுவர் மறைந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும் வெளியிடத்துப்பயணத்தை பின்போடுவது விரும்பத்தக்கது.

கடகம்: தாம்பத்திய வாழ்க்கையில் தனிச் சிறப்புக்காணப்படும் பெரியவர்களின் உதவி உங்களுக்கு தப்பாமல் கிடைக்கும் பிரிந்த குடும்பம் மீண்டும் இணைவதற்கு இடம் உண்டு.

சிங்கம்: தொழில் துறையில் போட்டா போட்டிகள் தோன்றும் முன்னேறுவதற்கான சந்தர்ப்பமொன்று கைநழுவிப் போகலாம் உறவாடிக் கெடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர்.

கன்னி: மனம்போல் வாழ்வு மலரும் கடமையாற்றுமிடத்தில் சகதொழிலாளர்களின்ஒத்துழைப்பும் கிடைக்கும் சிலருக்கு பதவி உயர்வும் உண்டு பிதாவின் ஆசி தப்பாமல் கிடைக்கும்.

துலாம்: நிதியில் நல்ல அபிவிருத்தி காணப்படுகின்றது நீண்ட நாள் கடன் தொல்லை இன்றுநிவர்த்தியாகும்கணவன் மனைவி உறவு முறைகள் மகிழ்ச்சி நிறைந்து காணப்படும் சுபதினம்:

விருச்சிகம்: மனைவாழ்வில் மகிழ்ச்சிகரமான திருப்பம் ஏற்படும் குழந்தைகளின் முன்னேற்றம் திருப்தியை அளிக்கும் வருமானத்தில் உயர்ச்சி கிடைக்கும்.

தனு: கௌரவத்தைப்பாதிக்கக்கூடிய சம்பவங்கள் இடம்பெறும் தூற்றலகளை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர் பெரியவர் ஒருவருடன் பகைத்துக்கொள்ள நேரிடும் எதிலும் முன்யோசனை வேண்டும்.

மகரம்: உணர்ச்சிவசப்படுவீர் மனப் போராட்டங்கள் நடைபெறும் உடல்நலம் பாதிக்கப்படலாம்குடும்பத்தில் ஏற்படும் மோதல்கள் விரக்தி மனப்பான்மையும் உருவாகும்.

கும்பம்; கலைஉலகம் சம்பந்தப்பட்டவர்களுக்கு புகழ் குவியும் கனிவான பேச்சு காந்தம் போல் பார்வை கன்னியர் உறவு காதலுக்கு இடமுண்டு கவர்ச்சிகரமான நாள்.

மீனம்: ஆபத்து மிகவுண்டு அடுத்துக் கெடுப்பவர் அருகிலேயே இருப்பர் எதையும் ஆராய்ந்து பார்ப்பதே நன்று நடையில் தயக்கம் ஏற்படும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## நிர்வாகசபை

[மட்டுவில்]

விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் நிர்வாகிகளாக கீழ்க்காண்போர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் க. செல்லத்துரை, உபதலைவர் வி. குழந்தைவேலு செயலாளர் எஸ். எம். அருளம்பலம், உபசெயலாளர் சி. கந்தசாமி, பொருளாளர் த. தம்பிராஜா உப பொருளாளர் திரு. இ. இராஜநாயகம் மேலும் பத்துபேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.


வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
பிரதாப்— சோபா
மூடுபனி

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்
முரட்டுக் காளை

றீகல்-Regal தினசரி 10-30, 2-00, 4-30
சில தினங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது
கபீர்பேடி....சனம் சூரி...
''கேர்ல் (f)ப்ரம் இந்தியா''
GIRL FROM INDIA (TECHNICOLOR)
வயது வந்தவர்கள் மட்டும்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஜெய்கணேஷ் - லதா - நாகேஷ்
அழகே உன்னை ஆராதிக்கிறேன்
(கலர்-புதியபிரதி)
விரைவில் வருகிறது
ஆனந்தராகம்

ஸ்ரீதர் தினசரி 10-30, 2-30, 6-00
(யாழ்ப்பாணம்)
விஜயன் - சத்தியகலா
த னி ம ர ம்

ராணி தினசரி 10-30, 2-30, 6-15 மட்டும்
(யாழ். நகர்)
9-வது வாரம்
கமலஹாசன் - அம்பிகா
சகல கலா வல்லவன்

**மணிவாக்கு**

மெய் வாய் கண்மூக்குச் செவியெனப் பேர்பெற்ற ஐவாய் வேட்கை அவாவினைக் — கைவாய்க் கலங்காமல் காத்து உய்க்கும் ஆற்றல் உடையாரை விலங்காமல் வீடுபெறும்.

— நாலடியார்.

# இன்று அரசாங்க விடுமுறை

(கொழும்பு)

இன்று செவ்வாய்க்கிழமை பொதுவிடுமுறை தினமாக அரசாங்கம் பிரகடனம்செய்துள்ளது.

அரசாங்க நிறுவனங்களும், பாடசாலைகளும் நாளை மூடப்பட்டிருக்குமென்றும் தனியார் நிறுவனங்களும் இந்த ஒழுக்கு முறையைக்கடைப் பிடிக்கலாம் என்றும் அரசாங்கம் விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இன்றும் ஊரடங்குச் சட்டம் பகல் இரண்டு மணிமுதல் அமுலில் இருக்கும் என்றும் மேற்படி அறிக்கை தெரிவித்தது.

# நமது நோக்கு

## வருமானத்தின் வீழ்ச்சி

இலங்கை ரூபாயின் பெறுமதி இறக்கம் மக்கள் வாழ்க்கையின் சுமைகளை அதிகரித்து வருகின்றது.

நாட்டின் இறக்குமதி ஏற்றுமதியிலும் பார்க்க இரண்டு பங்கு அதிகமாயிருக்குமளவும் நிலைமை திருந்த இடமில்லை.

இந்த நிலையில் இன்றைய தாராளமான பொருளாரக் கொள்கையினால் பெரும் பயனடையும் வர்த்தக நிறுவனங்களும் தனிப்பட்ட செல்வர்களும் தாம் பெறும் அசுர லாபத்துக்கேற்ற வருமான வரியைக் கொடுப்பதில்லையென நிதிஅமைச்சர் திரு. ரொனி டி மெல், அண்மையில் நடைபெற்ற அரசாங்க அதிபர்கள் மகாநாட்டில் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

போதிய ஆதாரமில்லாமல் நிதிஅமைச்சர் இவ்வாறு கூறியிருப்பாரென்று நம்ப இடமில்லை.

தமது கடந்தகால அனுபவத்திலேயே அமைச்சர் கண்ட கசப்பான உண்மை இதற்குப் பலமளிக்கிறது.

''செல்வர்கள் பெருஞ் செல்வர்களாக வாழவும், அந்த நிலைபரத்தில் சாகவும் விரும்புகின்றனர். அரசுக்குரிய வருமான வரியைக் கொடுக்க மறுப்பதும் அதனைக் கொடாது காலந் தாழ்த்துவதும் செல்வரின் செருக்குற்ற செயல் என்று நிதிஅமைச்சர் திட்டவட்டமாகக் கூறியிருக்கின்றார்.

''செல்வரைச் செல்லங் கொஞ்சும் அரசுக்கு இது போதாது'' என்றொரு சாதாரண பிரஜை முணுமுணுத்தால் அது தவறென்று கொள்ளலாமா?

நாட்டில் பல்லாயிரத்துக்கு மேற்பட்ட வரையறுக்கப்பட்ட கம்பனிகள் இயங்கும்போது ஐயாயிரமே வருமான வரி கொடுக்கின்றன. இன்று லாபத்தில் ஓடாத கம்பனிகள் அதிகமிருக்குமா?

தனிப்பட்ட நபர்கள் 18,000 பேரே வருமானவரி கட்டுபவர்களாக வருமான வரிதிணைக்கள இடாப்புகள் தெரிவிக்கின்றன. இத்தொகையில், உழைக்குமளவிற்கு வரிகட்டும் (Paye) ஏழைச்சம்பள சிப்பந்திகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். எத்தனை செல்வச் சுறுக்கள் வருமானவரியின் பழக்கமானவலையில் அகப்படாது தப்பியிருப்பார்கள்?

வியாபார மொத்தவரி கொடுக்கும் வியாபார நிறுவனங்கள் 45,000 மட்டுமே! அதிலும் அரைவாசி கொழும்பிலுள்ளவையே!

இந்தவிபரங்கள் வருமான வரித்திணைக்களத்துக்கு ஒரு நல்லபடிப்பினையாக வேண்டும்.

அதுமட்டுமல்ல கடந்த ஆட்சியில் வருமானவரி கட்டாது, அல்லது அவ்விடயத்தில் 'டிமிக்கி' விட்டவர்களை அரசு துரத்திப்பிடித்ததை நாம் மறக்கவில்லை. வருமான வரிகட்டுபரின் எல்லை மிகக்கடுமையாக இறக்கப்பட்டது; அரசாங்க உத்தியோகத்தவர்களுக்கு எவ்வித தயவும் வழங்கப்படவில்லை.

அக்காலத்தில் வியாபாரம்வர்த்தகம் செழிப்பற்றுக் குன்றியிருந்ததன் காரணங்களில் இரண்டு: கட்டுப்பாடுள்ள பொருளாதாரம்; கடினவருமானவரித் திட்டம். எனவே அடித்தடித்து அரசுக்கு வரி கொடுக்கப் போதாதென்ற மனப் போக்கு நாட்டில் வறுமைத் தோற்றத்தை உண்டுபண்ணியது.

இன்று நாம் எங்கும் செல்வத்தின் தோற்றத்தையே காண்கின்றோம்; பார்க்குமிடமெல்லாம் மின்னுகின்றது; ஆனால் மின்னுவதெல்லாம் பொன்னா?

கள்ளக்கடத்தல், தொழில் நிலையங்களில் மோசடி ஒப்பந்த நிறுவனங்கள், அரச திணைக்களங்கள் போன்ற பல இடங்களில் மலியும் ஊழல், அதற்கு மேலாக நிதி அமைச்சர் குறிப்பிடும் நன்றிகெட்ட, தேசப்பற்றற்ற இம்மாபெருங் குறை-வருமானவரியை வஞ்சித்தல்,-இவையெல்லாம் வேகமாய் வளர்ந்துவருவதானல் பொது மக்கள் வாழ்வு, நாட்டின் பொருளாதார சேமம் எவ்வாறு நலமுறும்?

நாடு வேறு; நாம் வேறு என்று எம்மை இரண்டாகப் பிரித்து இரட்டை வேடத்தில் வாழும் சமூகம் எவ்வகையிலும் முன்னேற இடமில்லை.

வருமானவரித் திட்டத்தின் நீதி, நீதியின்மைபற்றி நாம் ஆராயவில்லை.

சட்டத்துக்கமைய எவரும் தம்முடைய உரிமையை வாதாடிப் பெறலாம்; வரி கட்டாது தப்பி வாழும் செல்வர்கள் வருடா வருடம் பெருஞ் செல்வர்களாகத் திகழலாம்; ஆனல் அச்செயல் நாட்டை, சமூகத்தை நலிவுறுத்துவதென்பதை உணர்வாரானல் அது சமூகத்துக்கு விளைவிக்கும் துன்பமல்லாமல் தெய்வத்தின் பார்வையில் பெரும் பாபமுமாகும்.

அரசைப் பொறுத்தளவில், வருமான வரித்திணைக்களம் புனரமைக்க வேண்டிய அவசியம் புலப்படுகிறது.

### வெங்காய...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டுகள் கருகிப்போயிருப்பதால் பூரணமான விளைச்சலை தாம் எதிர்பார்க்க முடியாது இருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எந்த விதமான கிருமி நாசினி மருந்துகளை பாவித்தாலும் உரிய பயன் கிடைக்கவில்லை என்றும் இம்முறை அரைகுறையான விளைச்சலையே தாம்பெறவிருப்பதாகவும் இவர்கள் கூறுகின்றனர்.

பண்டத்தரிப்பு, மாதகல் சில்லாலை, வடலியடைப்பு ஆகிய இடங்களில் பெரும்பாலான விவசாயிகள் இம்முறை வெங்காயச் செய்கையிலேயே அதிகமாக ஈடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

(க)

# கிராமோதய சபைகளுக்கு ஐந்தாண்டு வேலைத்திட்டம்

(வேலணை)

''கிராமோதய சபைத் தலைவர்கள் கிராமத்தின் வளர்ச்சியில் அதிக அக்கறையுடனும், ஆர்வத்துடனும் செயல்பட முன்வரவேண்டும்'' என்று ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தமது அலுவலகத்தில் நடந்த கிராமோதயத் தலைவர்கள், விசேடசேவை உத்தியோகத்தர்கள் கருத்தரங்கிற்கு தலைமைவகித்து உரையாற்றுகையில் கூறினர்.

தமது உரையில் அவர் மேலும்கூறியதாவது: ''கிராம மட்டத்தில் நடைபெறுகின்ற சகல பொதுவேலைத் திட்டங்களிலும் கிராமோதயசபைத் தலைவர்கள் பங்கு கொண்டு அவற்றை மேற்பார்வைசெய்ய வேண்டியது உங்களின் பொறுப்பாகும். கிராமங்களின் நலன்களில் அக்றைகொண்டு அவற்றை வளர்த்துக்கொள்வதற்கும் அந்தந்தக் கிராமங்களில் இருக்கின்ற பொதுமக்களின் நலன்களில் அக்கறை செலுத்தி அங்குள்ள மக்களை நன்கு வளம்பெறச் செய்ய வேண்டியதுடன் அந்தக் கிராமத்தில் உள்ள தொண்டு உள்ளம், சேவை மனப்பான்மை உள்ளவர்களைத் தெரிந்து அவர்களையும் பொதுவேலைத்திட்டங்களில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

பண்டைக்காலத்தில் பஞ்சாயத்தின் மூலம் கிராமத்தில் உள்ள பிணக்குகள், மோதல்கள் முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டன. அதேபோல இப்பொழுதும் ஒவ்வொரு கிராமத்திலும் நல்லிணக்கச் சபைகளை நிறுவி மக்களை பொலிஸ் நிலையம் செல்லாதவாறு செய்யவேண்டும். ஒவ்வொரு கிராமோதய சபைத் தலைவர்களும் தங்கள் தங்கள் பகுதிக்குத் தேவையான முறையில் ஐந்தாண்டு வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டும். இதனை சரிவரச்செயல்படுத்தி, கிராமமக்களை வளம்செய்ய வேண்டும்''

வரட்சிநிவாரண வேலைகள், குடிதண்ணீர் விநியோகம் போன்ற விடயங்களும் இக் கருத்தரங்கில் ஆராயப்பட்டன

# 'இளமையில் கல்வியுடன் உடல்பயிற்சியும் அவசியம்'

## - ஸ்கந்தா அதிபர் உரை

(யாழ்ப்பாணம்)

''சுவர் இருந்தால் தான் சித்திரம் தீட்டலாம். உடல் ஆரோக்கியம் பேணப்பட்டால் தான் உள சுகம் பேணப்படும். இளமையில் கல் என்பதுக்குச் சமாந்தரமானதே இளமையில் உடற்பயிற்சி செய் என்பதும் காலம் கடந்தால் மேற்படி இரண்டும் எட்டாக் கனிகளாகிவிடும். ஆகவேதான் பள்ளிக்கூட மாணவர்கள் சகலரும் வகுப்பறை ஊக்கத்துடன் நின்றுவிடாது விளையாட்டு மைதானத்திலும் ஆர்வத்துடன் ஈடுபடுதல் அவசியம்''.

இவ்வாறு சுன்னுகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி வருடாந்த இல்லமெய்வல்லுனர் போட்டியில் தலைமையுரை நிகழ்த்திய மேற்படி கல்லூரி அதிபர் பொ. நாகரத்தினம் குறிப்பிட்டார்.

இவ் விளையாட்டு விழாவில் யாழ் கல்வி இலாகா பிரதம கல்வி அதிகாரி ஜனப் எம். எம். மன்சூர் முதன்மைவிருந்தினராகக் கலந்துகொண்டார். அதிபரின் உரையை அடுத்துப் பேசிய ஜனப் மன்சூர் கூறியதாவது:

'வெற்றிதோல்விகளை சமமாக மதித்து எதிர்கால வாழ்க்கைக்குத் தயார் செய்வதும் விளையாட்டுக்களே. இன்று பொதுவாக பாடசாலைகளில் கட்டுப்பாடு ஒழுங்கள் காணப்படுவதில்லை. ஆனல் ஸ்கந்தா மாணவர்கள் தாம் மிகுந்த கட்டுக்கோப்புடன் விளங்குவதை தமது இல்ல விளையாட்டுப் போட்டிகள் மூலம் நிரூபித்துள்ளனர்'' என்றார்.

இவ் இல்ல விளையாட்டுப் போட்டிகளில் இளையதம்பி இல்லம் $577\frac{1}{2}$ புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டது. (கி)

### விரைவில் கும்பாபிஷேகம்

(வேலணை)

வேலணை சேர் வயித்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தில் பல வருடங்களாகக் கட்டப்பட்டு புறக்கணிக்கப்பட்டுக் கிடந்துவந்த சிவன் கோவிலை புதிய அதிபராகப் பொறுப்பேற்றுள்ள திரு. மு.சிவராசரத்தினம் இக்கோவிலின் திருப்பணி வேலைகளைப் பொறுப்பேற்றுச் செய்துவருகின்றார். வெகுவிரைவில் இக்கோவிலின் மகா கும்பாபிஷேகம் நடைபெறவிருக்கின்றது.

(கி)

### சேவைநலம் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் அதிபராகப் பணியாற்றிய திரு. க. சின்னையா அதிபர் பதவியினின்றும் ஓய்வுபெற்றுள்ளார்.

இவர் ஆசிரியர்கள், மாணவர்களுடன் மிகவும் அன்புடனும் பண்புடனும்நடந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு மிகவும் பாடுபட்டுழைத்துள்ளார். பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் அவரது சேவையைப் பாராட்டினர்கள்.

(க)

### பொருளாதார

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உண்மை. ஆரோக்கியம் குறைந்த மனிதர் ஒரு சமுதாயத்திற்குப் பெரிய சுமையாவார்.


## மரண அறிவித்தல்

### திரு. பொன்னையா பரராஜசிங்கம்

(நொச்சிக்குளம் யூனிட் தொழிற்தள உத்தியோகத்தர்)

Technical officer

மாரியம்மன் லேன் திருநெல்வேலியைச் சேர்ந்த பொ. பரராஜசிங்கம் அகால மரணமானர். அன்னர் திருமதி பொன்னையா பொன்னம்மா ஆகியோரின் அன்பு மகனும், வசந்தாதேவியின் அன்புக் கணவரும், மயூதரன், நிசங்கா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தனபாலசிங்கம், நடராஜா, சதாசிவம், மகேஸ்வரி, நாகரட்னம், சரஸ்வதி ஆகியோரின் சகோதரனும். காலம் சென்ற திரு. விசுவரட்ணம், திருமதி நாகரட்ணம் விசுவரட்ணம் ஆகியோரின் அன்பு மருமகனும், திருமதி சரவணமுத்து மனேன்மணியின் பெறுமகனும், திருமதி சரோஜினிதேவி, திருமதி சாந்தாதேவி' திருமதி சந்திராதேவி. செல்விகள் சூரியகுமாரி, நிர்மலாஜினி, சிவலோகநாதன் (ஆர்த்தி ஜுவலர்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பி, தட்சணாமூர்த்தி (ஆசிரியர் நடேஸ்வராக் கல்லூரி, K. குலசிங்கம் (கௌரி ரெக்ஸ்ரைல்ஸ்), திரு. சோமபாலன் (அரசாங்க அச்சகப் பகுதி கொழும்பு) ஆகியோரின் சகலனுமாவார். ஈமக்கிரியைகள் இன்று காலை 10 மணிக்கு நடைபெறும். 8092


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு ஜூலை மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telegram: Eelanadu, Telephone: 22389—24126.